[2020 மார்ச் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு பள்ளிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்திலுள்ள ஒரு பள்ளியையும், மற்றொரு நடுநிலைப் பள்ளியையும், உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். இந்த இரண்டு பள்ளிகளில், ஏதாவது ஒரு பள்ளியைத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று நீங்கள் கடிதம்மூலம் கோரிக்கை வைத்தீர்களேயானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அது நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

117—

புதிய மின்மாற்றி

***37578—திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, கந்தன்சாவடி சந்தியப்பன் சாலை பகுதியில் பழுதடைந்துள்ள மின்மாற்றிக்கு மாற்றாக புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கந்தன்சாவடி, சந்தியப்பன் சாலையில் மின்மாற்றி பழுதடைந்திருக்கின்றது என்றும், அதை மாற்றித் தர

2020 மார்ச் 18]

வேண்டுமென்றும் சொல்லியிருக்கின்றார். பழுதடையவில்லை, ஏற்கெனவே அங்கு 500 KVA மின்மாற்றி இருக்கின்றது. அந்த மின்மாற்றியிலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. அப்படி ஒரு மின்மாற்றி பழுதடைந்துவிட்டால்கூட, மாற்று மின்மாற்றி இருக்கின்ற காரணத்தினால், அதிலிருந்து சீரான மின்சாரம் கொடுக்கப்படும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, கூடுதலாக இன்னும் 100 MVA மின்மாற்றி வைப்பதற்குண்டான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதனால், அந்தப் பகுதியில் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத்தின் தலைவர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட வார்டு எண் 184, கந்தன்சாவடி, சந்தியப்பன் சாலையில் கோதண்டராமர் நகர் 1, 2, 3 மற்றும் 4–வது தெருக்களில் மின்னழுத்தம் குறைவாக இருப்பதால், அந்தப் பகுதியில் அமைந்துள்ள 500 KVA மின்மாற்றியை, கூடுதல் மின்மாற்றியாகவோ அல்லது புதியதாக ஒரு மின்மாற்றியையோ அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மேலும், வார்டு எண் 184, கந்தன்சாவடியில் உள்ள கோவிந்தசாமி நகர் 1, 2, 3, 4 மற்றும் 5–வது தெருக்களிலும்; வார்டு எண் 190, பள்ளிக்கரணையில் வள்ளல் பாரி நகர், 2–வது மெயின் ரோடு மற்றும் 13, 14 மற்றும் 16 ஆகிய தெருக்களிலும்; வார்டு எண் 188, மடிப்பாக்கத்தில் உள்ள குபேரன் நகர், இராஜாஜி நகர், சதாசிவன் நகர் ஆகிய பகுதிகளிலும், வார்டு எண் 169, புழுதிவாக்கத்திலுள்ள ராம் நகர், அன்னை தெரசா நகர், ராமகிருஷ்ணன் நகர், ராஜீவ் நகர் ஆகிய பகுதிகளிலும் மின்னழுத்தம் குறைவாக உள்ளதால், மேற்குறிப்பிட்டுள்ள பகுதிகளில் புதிய மின்மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டோம். வார்டு எண் 192, நீலாங்கரையிலுள்ள ராஜேந்திரன் நகர், 4–வது மற்றும் 8–வது தெருக்களில் இரண்டு 25 கே.வி.ஏ. மின்மாற்றிகள் பழுதடைந்துள்ளன. பழுதடைந்துள்ள

மின்மாற்றிகள் அந்தப் பகுதியிலே சுமார் 6 மாத காலமாக கீழே இறக்கி வைக்கப்பட்டு, அவை சரிசெய்யப்படாமல் உள்ளன.

அதேபோல, 184, கந்தன்சாவடிக்குட்பட்ட கற்பக விநாயகர் தெருவில் புதிய மின்மாற்றி அமைக்க. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், நீங்கள், உங்களுடைய தொகுயிலுள்ள ஊர் பெயர் முழுவதையும் எழுதிக் கொண்டுவந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேள்வி நேரத்தில் இப்படிக் கேட்டீர்களென்றால் எப்படி? கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: புதிய மின்மாற்றிக்கான கம்பங்களெல்லாம் பொருத்தப்பட்டு, 7 மாதங்களுக்கு மேலாகியும் அந்தப் பணி முடிவடையாத நிலையில் இருக்கின்றது. ஆகவே, அந்தப் பகுதிகளெல்லாம் வளர்ந்து வருகின்ற பகுதியாக இருப்பதால், அங்கே கட்டுமானப் பணிகளை உருவாக்குகின்ற நிறுவனங்களுக்கு, OSR–க்கு எப்படி இடங்கள் ஒதுக்கப்படுகின்றனவோ, அதேபோல மின்மாற்றிகளை வைப்பதற்கும், அந்த இடங்களிலே துணை மின் நிலையங்களை அமைப்பதற்கும் ஒரு புதிய சட்டத்தை உருவாக்கி, அந்த இடத்தை மின்சார வாரியத்திற்கு ஒதுக்க வேண்டும். சென்னையில் மின்மாற்றிகளை அமைப்பதற்கு இடம் கிடைக்காமல் இருக்கின்ற ஒரு நிலை இருந்து கொண்டிருக்கின்றது. இதைப் போக்கிட நாம் ஒரு புதிய சட்டத்தை உருவாக்கிட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கிட்டத்தட்ட அவருடைய தொகுதியில் இருக்கின்ற அத்தனை பகுதிகளுக்கும் மின்மாற்றிகள் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். பொதுவாகவே, சோழிங்கநல்லூர், மடிப்பாக்கம், புழுதிவாக்கம் ஆகிய பகுதிகளில்தான் மின்னழுத்தம் அதிகமாக இருக்கின்றது. மின்னழுத்தக் குறைபாடு கடந்த காலங்களில் இருந்தது. இப்போது நாங்கள் புதிய மின்மாற்றிகளை அமைத்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புழுதிவாக்கம், உள்ளகரம்,

2020 மார்ச் 18]

மடிப்பாக்கம் போன்ற பகுதிகளுக்கு ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று கடந்த முறை கேட்டிருந்தார். அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான இடம் இல்லாத காரணத்தினால், நங்கநல்லூரில் ஏற்கெனவே இருக்கின்ற 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையத்தோடு அந்தப் பகுதிக்கென்று ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அது முடிந்ததற்குப் பின்னர் முழுமையான, சீரான மின்சாரம் வழங்கப்படும்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு பகுதிகளில் மின்மாற்றிகள் பழுதடைந்து கீழே இறக்கி வைக்கப்பட்டு, கம்பங்கள் நடப்பட்டு 7 மாதங்கள் ஆகியும் பணிகள் முடிவடையவில்லை என்று சொன்னார்கள். மின்மாற்றிகள் வருவதற்கு காலதாமதம் ஆகியிருக்கின்றது. இருந்தாலும்கூட, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, ஒரு மின்மாற்றி பழுதடைந்துவிட்டால், அதற்கு மாற்றுவழி இருக்கின்றது. அந்த மாற்றுவழியின் வாயிலாக நாங்கள் சீரான மின்சாரத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்போது கோடைக்காலம் வரவிருக்கின்ற காரணத்தினால், அந்தப் பணிகளை விரைந்து முடிப்பதற்குண்டான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி மிகப் பெரிய தொகுதியாகவும், அதிகப்படியான மக்கள் வாழ்கின்ற தொகுதியாகவும் இருந்து கொண்டிருக்கின்றது. அந்தச் சூழ்நிலையில், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட உள்ளகரம், புழுதிவாக்கம், மடிப்பாக்கம் போன்ற பகுதிகளில் நீண்ட நெடுநாட்களாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போன்று, மின்னழுத்தக் குறைபாடுகள் இருந்து வருகின்றன. அங்கே இருக்கின்ற நகர்களின் நலச் சங்கங்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் அங்கே ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து வருகின்றார்கள். நானும், துணை மின் நிலையம் வேண்டுமென்று தொடர்ந்து பலமுறை இந்த அவையில் வலியுறுத்தி வருகின்றேன்.

[2020 மார்ச் 18

ஆகவே, பள்ளிக்கரணைக்குட்பட்ட பகுதியில் சென்னை மாநகராட்சியின் வசமுள்ள குப்பைகளைப் பிரிக்கின்ற இடத்தில் அதிகப்படியான காலியிடம் உள்ளதால், அந்தப் பகுதியில் போர்க்கால அடிப்படையில், ஒரு துணை மின் நிலையத்தை அமைத்துத் தர வேண்டும். இந்தப் பகுதி சென்னை மாநகராட்சியோடு இணைக்கப்பட்டு 9 ஆண்டுகளாகின்றது. மேலும், சென்னை மாநகராட்சியின் 14 மற்றும் 15–வது மண்டலங்கள், 20 வட்டங்கள் மற்றும் வளர்ந்து வருகின்ற 7 ஊராட்சிகளான பெரும்பாக்கம், சித்தாலப்பாக்கம், ஒட்டியம்பாக்கம், நன்மங்கலம், வேங்கைவாசல், கோவிலம்பாக்கம் மற்றும் மேடவாக்கம் போன்ற பகுதிகளை உள்ளடக்கியும் உள்ளது. அந்தப் பகுதிகளில் மேலே செல்கின்ற உயரழுத்த மின் கம்பிகள் அமைக்கப்பட்டு நெடுநாட்களாகின்றன. அந்தப் பகுதிகள் கடற்கரையை ஒட்டிய பகுதியாக இருப்பதனால், காற்றடிக்கின்ற நேரத்தில் உப்புக் காற்றால் பாதிக்கப்பட்டு, அந்த மின் கம்பிகளெல்லாம் மிக விரைவில் சேதமடைகின்ற ஒரு நிலை இருந்து கொண்டிருக்கின்றது. அதனால் மழை நேரங்களில் சிறிய அளவில் காற்று வீசினாலே அந்த மின் கம்பிகளெல்லாம் அறுந்து விழுந்து மின் விபத்துகள் ஏற்படுகின்ற நிலை உருவாகின்றது. இதனால் அந்தப் பகுதிகளில் மின்சாரம் தடைபடுகின்ற ஒரு நிலையும் உருவாகின்றது. ஆகவே, சோழிங்கநல்லூர் தொகுதி முழுவதும் உள்ள அனைத்து சாலைகளிலும் மேலே செல்லும் மின் கம்பிகளை புதைவட மின் கம்பிகளாக மாற்ற வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்ட பிறகு நான் சொல்கின்ற பதிலை கவனிக்க வேண்டும். உறுப்பினர் கேட்ட புழுதிவாக்கம், மடிப்பாக்கம் போன்ற ஊரகப் பகுதிகளில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் இல்லாத காரணத்தினால், நங்கநல்லூரில் ஏற்கெனவே இருக்கின்ற துணை மின் நிலையத்தோடு சேர்த்து இப்போது புதியதாக அந்தப் பகுதிக்கென்று 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. கூடிய விரைவில் அந்தப் பணிகள் முடிந்தவுடன், சீரான மின்சாரம் வழங்கப்படும் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன்.

அதேபோல, அந்த மூன்று பகுதிகளில்தான், கடந்த கோடைக் காலங்களில் மின் பளு அதிகமாக இருந்த காரணத்தினால், பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டன. இருந்தாலும், நாங்கள் தடையில்லாமல் மின்சாரம் கொடுத்துக் கொண்டிருந்தோம். ஆனால், இந்த ஆண்டு அதற்காக நாங்கள் மாதம் ஒருமுறை ஆய்வுக் கூட்டம் நடத்தினோம். அந்தப் பகுதியிலே இந்த ஆண்டு அதுபோன்ற பிரச்சினைகள் வரக் கூடாது என்பதற்காகத்தான் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. அந்தப் பகுதியிலே இந்த ஆண்டு பிரச்சினை இல்லாத அளவுக்கு நாங்கள் பார்த்துக்கொள்வோம். அதேபோல, உங்களுடையது கடற்கரைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், மேலே செல்கின்ற மின்கம்பிகளை புதைவடமாக மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். உங்கள் பகுதிக்கும் I.T. Corridor—அடையார், இரண்டுக்கும் சேர்த்து, 821 கிலோ மீட்டர் நீளத்திற்கு 257 கோடி ரூபாய்க்கு இப்போது டெண்டர் விடப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் நடைபெறவிருக்கின்றன. அந்தப் பணிகள் 2021–2022 ஆம் ஆண்டுக்குள் முடிந்து விடும். அவை முடிந்தால், இனிமேல் அந்தப் பகுதியிலே அதுபோன்ற நிகழ்வே இருக்காது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

118—

பாலம்

***13350—திரு. சௌ. தங்கப்பாண்டியன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜபாளையம் தொகுதி, மீனாட்சியாபுரம் ஊராட்சியில் தேவியாற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?